**வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ஆர்எம்ரீஎவ்) - 2014**

வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று என்பவற்றினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 2005 திசெம்பர் 09 இல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் திறைசேரி செயலாளருக்கும் மற்றும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கையாளர்களுக்கும் இடையில் கைசாத்திட்ட வீதிப் பராமரிப்பு நிதியத்தின் உறுதியின் II ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஸ்தாபிப்பு**

வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2005 திசெம்பர் 09 இல் கைசாத்திட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதி ஒன்றின் மூலம் நம்பிக்கை பொறுப்பு கட்டளை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு செயற்படுத்துகின்றது. ஆரம்பத்தில் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினூடாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் (ஆர்டிஏ) பராமரிக்கப்பட்ட வீதிகளிற்காக நிதிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் இறுதியாக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களால் பேணப்பட்ட வீதிகளும் வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகவே, வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் தற்போதைய பிரதான நலன்பெறுனர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும். இது வகுப்பு ஏ மற்றும் பீ தர வீதிகளை பராமரிப்பதற்கான பொறுப்பில் உள்ளது. வீதிப் பராமரிப்பு நம்பிக்கை பொறுப்பு நிதியமானது நம்பிக்கை பொறுப்பாளர் சபையால் முகாமை செய்யப்படுகின்றது. வீதிப் பராமரிப்பு நம்பிக்கை நிதியத்திற்கான நிதியளிப்பு வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக ஒழுங்கு செய்யப்படுகின்றது. ஆரம்பத்தில் வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் ஊடாக 2012 முதல் 2014 செப்தெம்பர் வரை ரூபா 1,365 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.5 மில்லியன் வழங்குவதற்கு சர்வதேச அபிவிருத்திச் சங்கம் உடன்பட்டது. அதில் ரூபா 1,300 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் காலரீதியான பராமரிப்பு நோக்கத்திற்கு நிதியளிப்பதற்கு உடன்பட்டதுடன் ரூபா 65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.5 மில்லியன் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் மீண்டெழும் கிரயத்தை செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

**1.3 நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

**குறிக்கோள்கள்**

நம்பிகைப் பொறுப்பு உறுதியின் 4 ஆம் பிரிவின்படி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்களாவன,

(அ) வீதி வலையமைப்பின் பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காக உரிய நேரத்தில் தேசிய வீதிகளின் ஒழுங்கு முறையான மற்றும் காலரீதியான வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியளித்தல்.

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை முகாமை செய்து அபிவிருத்தி செய்தல் மற்றும் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளிற்கு உடனடியாக வேண்டப்படாத

அவற்றின் ஏதும் ஒரு பகுதியை பொருந்தக்கூடிய வகையில் செயல்நுட்பமான மற்றும் பாதுகாப்பான முதலீட்டுக் கலவையால் அவ்வாறான முதலீடுகளையும் பிணையங்களையும் முதலீடு செயதல் மற்றும் அவ்வாறான முதலீட்டுக் கலவையிலிருந்து நிதியளிப்பதற்கு அதிக வருமானத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் ஏதும் முதலீடுகளையும் பிணையங்களையும் வைத்திருத்தல், விற்றல் அல்லது வேறு வகையில் விற்றுத்தீர்த்தல்.

(இ) நாட்டில் நிலவுகின்ற சட்டங்களின்படி நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களிற்கு ஏதுவாக அல்லது அவசியமானவை எனத்தென்படும் ஏதாவது உரிமைகள், சிறப்புரிமைகள், அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சலுகைகள் என்பவற்றினை ஏதாவது அத்தகைய அரசாங்கம் அல்லது வேறு அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

(ஈ) மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக எவ்வழிகளிலும் பெற்றுக்கொண்ட நம்பிக்கை பொறுப்பின் வருமானத்தை பயன்படுத்துவதற்கும் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தை நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனைத் தவிர்த்து வேறு நபரிற்கோ அல்லது அமைப்பிற்கோ காசாக அல்லது வேறு வழிகளில் பகிர்ந்தளிக்கப்படுதல்.

(உ) நம்பிக்கை பொறுப்பின் ஏதாவது குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அடைந்து கொள்வதற்கும் தற்செயலான அல்லது நன்மையாக்கும் அத்தகைய சகல சட்டபூர்வமான விடயங்களையும் செய்வதற்கு.

(ஊ) நம்பிக்கை பொறுப்பின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு மிகவும் உகந்தது என எண்ணுகின்றவாறு அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் தற்துணிபுகளை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பிரயோகிப்பதனை உறுதிப்படுத்தல்.

## 1.4 நலனாளிகள்

நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 7 ஆம் பிரிவின்படி, நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ), மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு மற்றும் அல்லது அவர்களைத் தொடர்ந்து செயற்படுத்துவோர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நலனாளியாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கக்கூடிய வேறு ஏதாவது அரசாங்க நிறுவனங்கள் இந்த நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் நலனாளியாக இருப்பார்கள் இவர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பணத்தைப் பற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

## 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்திற்கான பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.6 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 227,106 பெறுமதியான திறைசேரி உண்டியல் மீதான முதலீடுகள் மற்றும் அவற்றின் மீதான ரூபா 73,046 வட்டி என்பன கணிப்பீட்டுத் தவறு காரணமாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) பிரிவு 4 | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டின் செப்தெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்கான வருடாந்தப் பாதீடு தயாரிக்கப்பட்டு வேண்டப்பட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) பிரிவு 4.3 | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) பந்தி 5 | குறித்த காலத்திற்குள் நிதியத்தின் வெற்றிகரமான அமுலாக்கலை உறுதிப்படுத்தும் வகையில் மாதாந்த, காலாண்டு, அயையாண்டு போன்றவற்றில் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டும் ஒட்டு மொத்த விரிவான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய திட்டமொன்றைத் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நம்பிக்கைப் பொறுப்பு உறுதி | |
| | (i) பிரிவு 4 | ரூபா 3725.4 மில்லியன் அரசாங்க பங்களிப்புகளில் எதிர்கொள்ளப்பட வேண்டுமென நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) பிரிவு 19 | நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகளை முன்னேற்றும் நோக்கில் பொருத்தமான வீதிப்பராமரிப்பு மற்றும் பரீட்சிப்புக்களை வழங்குவதிலுள்ள திறனை மதிப்பிடுவதற்கு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் நிதியம் தொடங்கியதிலிருந்து 3 ஆண்டுகளிற்கு பின்னர் மீளாய்வு செய்யப்பட வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பு பொறுப்பானது 2006 சனவரி 01 இலிருந்து செயற்பட்டிருந்த போதிலும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவ சபையானது நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை மீளாய்வு செய்திருக்கவில்லை. |
| (ஈ) | 2005 ஒக்தோபர் 26 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் 4 ஆம் பந்தி | அரசாங்கமானது பெற்றோல் மற்றும் டீசல் விற்பனைகளிலிருந்து அரசாங்கம் 2006 சனவரி 01 தொடக்கம் செயற்படும்படியாக டீசல் மற்றும் பெற்றோல் விற்பனையிலிருந்து பெறுகின்ற அரசாங்க வருமானத்திலிருந்து ஒரு லீற்றர் பெற்றோலுக்கு ரூபா 1 மற்றும் ஒரு லீற்றர் டீசலிற்கு ரூபா 0.50 ஒதுக்கி வைக்கப்பட்டு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எதிர்பார்க்கப்பட்ட இந்த பிரேரணை அமுலாக்கப்பட தவறியமையால் எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டை அடைய முடியாதிருந்தது. |

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| கொடையளிக்கும் முகவர் | 10.5 | 1,365 | 6.69 | 870.22 | 8.34 | 1,083.78 |
| இலங்கை அரசாங்கம் | - | - | - | 3,715.43 | 182.31 | 23,700.16 |
| | 10.5 | 1,365 | 6.69 | 4,585.65 | 190.65 | 24,789.94 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

வீதிப் பராமரிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது வீதிப் பராமரிப்பு நோக்கங்களிற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிதிகள் வழங்குவதற்கு மேலதிகமாக 10 தேசிய வீதிகளின் பல பிரிவுகளின் பராமரிப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2013 இல் தொடங்கப்பட்டிருந்த 43.08 கிலோ மீற்றர் நீளமான 08 தேசிய வீதிகளின் பராமரிப்பு வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், 10.6 கிலோ மீற்றர் நீளமான 02 தேசிய வீதிகளின் பராமரிப்பு வேலைகள் மீளாய்வாண்டு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் தேசிய கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 500 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களிற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், கண்டி- மஹியங்கனை- பதியத்தலாவை வீதியின் மேற்பரப்பிடல் மற்றும் பராமரிப்பு வேலைகளின் ஒப்பந்தம் ரூபா 365.1 மில்லியன், ரூபா 224 மில்லியன் மற்றும் ரூபா 235.2 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 3 பொதிகளிற்கு பிரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரே ஒப்பந்தகாரருக்கு சகல மூன்று ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டிருந்த என மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், கடுகஸ்தோட்டை- குருநாகல்- புத்தளம் வீதியின் அஸ்பல்ற் மேற்பரப்பிடல்

மற்றும் பராமரிப்பு வேலைகள் ரூபா 440.6 மில்லியன், ரூபா 435.6 மில்லியன் மற்றும் ரூபா 463 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 3 பொதிகளிற்கு பிரிக்கப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளிற்கு முரணாகஇன்னொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) வீதிப் பராமரிப்பு வேலைகளிற்கான பொறியியல் மதிப்பீடுகள் நியாயபூர்வமாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) வடிகாலமைப்பு முறைமையின் நிர்மாணம் கடுகஸ்தோட்டை – குருநாகல்- புத்தளம் வீதியின் 45+500 கிலோமீற்றர் முதல் 54+000 கிலோ மீற்றர் வரையான பிரிவின் பராமரிப்பு வேலைகளிற்காக தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், வடிகாலமைப்பு முறைமையொன்று நிர்மாணிப்பதற்கு முரண் கட்டளையின் கீழ் ரூபா 25,275,724 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட கேள்விகளில் காணப்பட்ட வீதிப் பராமரிப்பு வேலைகளின் வீதங்கள் பொறியியலாளர் மதிப்பீடுகளோடு குறிப்பிடத்தக்களவு முரண்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. ஆகவே, கண்டி- மஹியங்கனை- பதியத்தலாவை வீதியின் 15+000 கிலோமீற்றர் முதல் 20+000 கிலோமீற்றர் வரையான பிரிவின் பராமரிப்பிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகளின் 17 விடயங்களிற்கான வீதங்கள் பொறியியல் மதிப்பீடுகளை விட 80 சதவீதத்தால் விஞ்சியிருந்தது.

**3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வட மேல் மாகாணத்தில் தேசிய வீதிகளின் பராமரிப்பு வேலைகளிற்காக மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட ரூபா 209,560,000 தொகையான ஒதுக்கீடுகளில், நம்பிக்கை பொறுப்பு நிதியத்துடன் தொடர்புபட்டிருக்காத ஏனைய வேலைகளிற்காக ரூபா 24,954,594 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் செயலகத்திற்கான தொழில்நுட்ப உதவி நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஆலோசனையாளர்களால் செய்யப்பட்ட சிபாரிசின் பிரகாரம், மாதிரி அடிப்படையில் வீதி முகவர்களில் நிதிக் கணக்காய்வு நடாத்துவதற்கும் அடுத்துவரும் ஆண்டிற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முகாமைத்துவத்திற்காக அதனுடைய சொந்த பாதீட்டை தயாரிப்பதற்கும் இதனை தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய பிரேரணைகளை அமுலாக்குவதற்கு நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.